3பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 04 2025 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. சிறு விவசாயிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவரை உலக உணவு பாதுகாப்பு இலக்குகளை அடைய முடியாது என்று இந்தியா கூறியுள்ளது.

2. மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாதில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில ஆளுநர் திரு ஆனந்த் போஸ் பார்வையிட்டார்

3. ஜே இ இ பிரதான நுழைவுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட உள்ளன.

4. ரஷ்யாவுக்கு, சீனா ஆயுதங்களை வழங்குவதாக கூறும் உக்ரைனின் குற்றச்சாட்டு தவறானது என்று சீனா கூறியுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் பெங்களுரு அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>

சிறு விவசாயிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவரை உலக உணவு பாதுகாப்பு இலக்குகளை அடைய முடியாது என்று இந்தியா கூறியுள்ளது.

பிரேசிலில் நடைபெற்றுவரும் 15-ஆவது பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் மாநாட்டில் நேற்று உரையாற்றிய மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவமான மற்றும் நீடித்த வேளாண் கொள்கையில் இந்தியா உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

சிறு மற்றும் குறு விவசாயிகள் நலன்களில் மத்திய அரசு அக்கறை செலுத்தி வருவதாகவும், அவர்களுக்கென்று பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் வேளாண் துறையின் செயல்பாடுகள் வெறும் பொருளாதார செயல்பாடுகளோடு நின்று விடுவதில்லை என்றும், மக்களின் வாழ்வாதாரம், உணவு பாதுகாப்பு மற்றும் கோடிக்கணக்கான மக்களின் கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றுடன் தொடர்புடையது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள 51 கோடிக்கும் அதிகமான சிறு விவசாயிகள், உலக உணவு முறைக்கு முதுகெலும்பாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் நடைபெறவுள்ள உலக ஒளி-ஒலி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டிலும், வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக உணவு இந்தியா கண்காட்சியிலும் பங்கேற்குமாறு பிரிக்ஸ் நாடுகளுக்கு, இந்த கூட்டத்தில் திரு சிவ்ராஜ் சிங் சௌான் அழைப்பு விடுத்தார்.

இந்த கூட்டத்தில் பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்கள், பிரிக்ஸ் நில மீட்பு ஒத்துழைப்பு என்ற ஒரு புதிய திட்டத்தை தொடங்கிவைத்தனர்.

தரமான நிலத்தையும், தரமான மண்வளத்தையும் உறுதிபடுத்தும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

உலக உணவு முறையை நியாயமாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், நீடித்த இலக்கை எட்டும் வகையிலும் மாற்றவும் பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் மாநாட்டில் கூட்டு பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 24 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் சத்ரபதி சாம்பாஜி நகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2014-ஆம் ஆண்டு 600 கோடி ரூபாய்க்கு மட்டுமே தளவாடப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 2030-ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தளவாட பொருட்கள் ஏற்றுமதியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருவதாகவும், உற்பத்திக்கான இந்தியா இயக்கம் இதற்கு உந்துசக்தியாக இருப்பதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>

இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் மேற்கொள்ளப்படும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு சரக்கு மற்றும் சேவை வரியை விதிக்க அரசு பரிசீலித்து வருவதாக கூறப்படும் தகவல்கள் தவறானவை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இத்தகைய தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் மீது சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அந்த அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை அரசு ஊக்குவித்து வருவதாகவும், தொடர்ந்து நாடு முழுவதும் இத்தகைய பணப்பரிவர்த்தனை அதிகரித்து வருவதாகவும் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாதில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில ஆளுநர் திரு ஆனந்த் போஸ் பார்வையிட்டார்.

வக்ஃப் வாரிய திருத்தச்சட்ட மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்மாநிலத்தில் சில இடங்களில் நடைபெற்ற போராட்டத்தின்போது வன்முறை ஏற்பட்டது.

முன்னதாக, பாதிக்கப்படட பகுதிகளுக்கு ஆளுநர் செல்ல வேண்டாம் என்று மேற்குவங்க மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

<<<<<>>>>>

ஜே இ இ பிரதான நுழைவுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட உள்ளன.

தேர்வு முடிவுகள் **jeemain.nta.nic.in** என்ற வலைதளத்தில் வெளியிடப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

ஜே இ இ பிரதான தேர்வு முடிவுகள் கட் ஆஃப் மதிப்பெண்களுடன் வெளியிடப்படும் என்றும் அது அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜே இ இ பிரதான தேர்வு கடந்த இரண்டாம் தேதி மற்றும் ஒன்பதாம் தேதி நடைபெற்றது.

இந்த ஆண்டு ஜனவரி மாதமும் மற்றும் ஏப்ரல் மாதமும் இரண்டு சுற்றுகளாக இந்த தேர்வு நடத்தப்பட்டது.

இரண்டிலும் சிறப்பான மதிப்பெண்களை பெற்ற மாணவர்கள் இறுதி தரப்பட்டியலில் இடம்பெறுவார்கள் என்று தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இந்த தேர்வு முடிவுகளுடன் தேசிய அளவில் முதலிடத்தை பெற்ற மாணவர்களின் பட்டியலும் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தில், குறு-சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பில் கைவினைத் திட்ட தொடக்க விழா இன்று காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு எட்டாயிரத்து தொள்ளாயிரத்து 51 கைவினைத் தொழில் முனைவோருக்கு 170 கோடி ரூபாய் கடனுதவிகளை வழங்க உள்ளார்.

34 கோடி ரூபாய் மானியத்திற்கான ஆணைகளையும் அவர் வழங்க உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

மத்திய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்டத்தின்கீழ், வேலூர் அஞ்சலக கோட்டத்தில், கடந்த பத்தாண்டுகளில் சுமார் 50 ஆயிரம் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் எதிர்காலத்துக்கு இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று வேலூர் கோட்ட அஞ்சல்துறை முதுநிலை கண்காணிப்பாளர் திரு ராஜகோபால் தெரிவித்தார்.

*<u>(வாய்ஸ் பைட் - ராஜகோபால் - 44 செகண்ட்ஸ்)</u>*

இதுபோன்ற சேமிப்புத் திட்டங்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்துவதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

*<u>(வாய்ஸ் பைட் - பயனாளி – 30 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>>

ரஷ்யாவுக்கு, சீனா ஆயுதங்களை வழங்குவதாக கூறும் உக்ரைனின் குற்றச்சாட்டு தவறானது என்று சீனா கூறியுள்ளது.

பெய்ஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளியுறவுத்துறை உயரதிகாரி, ரஷ்யா – உக்ரைன் இடையிலான போரில் சீனா தலையிடவலிலை என்று கூறினர்.

இந்த போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்று சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப், விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா – உக்ரைன் இடையே பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்ததாகவும் ஆனால் இருதரப்பினரும் பிடிவாதம் பிடிப்பதால் இந்த முயற்சியிலிருந்து அமெரிக்கா விலகிக்கொள்ளும் என்றும் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல், மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

நகரில் அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி முதல், 37 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸ் முதல், 28 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும் இருக்கும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்றிரவு சுமார் இரண்டு மணிநேரம் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், பர்கூர், சூளகிரி, ஓசூர் உள்ளிட்ட இடங்களில் பலத்த காற்றால் மரங்கள் வேரோடு சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய பெங்களூரு அணி 14 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 95 ரன் எடுத்தது.

96 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன், பின்னர் விளையாடிய பஞ்சாப் அணி 12 புள்ளி ஒரு ஓவரில், ஐந்து விக்கெட் இழப்பிற்கு, 98 ரன் எடுத்தது.

இன்று மாலை மணி 3.30-க்கு அகமதாபாதில் நடைபெறவுள்ள ஆட்டத்தில், குஜராத் அணி – தில்லி அணியையும், இரவு மணி 7.30-க்கு ஜெய்பூரில் நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி – லக்னோ அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<>>>>>>

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஆர்த்தி வெண்கலப்பதக்கம் வென்றார்.

சவுதி அரேபியாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் 200 மீட்டர் ஓட்டத்தில் அவர் மூன்றாவது இடத்தை பிடித்தார்.

**<<<<<END>>>>>>**